**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அவிநாசி**

**முன்னிலை: திரு.எஸ்.வடிவேல், பி.எஸ்.சி., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, அவிநாசி**

**2023 ஆம் ஆண்டு, * அக்டோபர் மாதம் 07–ஆம், நாள் சனிக்கிழமை**

**<u>இடைநிலை மனு எண்.308/2023</u>**
**<u>இன்</u>**
**<u>அசல் வழக்கு எண்.315/2007</u>**

1.எஸ்.கருணையாத்தாள்

2.எஸ்.சுமதி

... மனுதாரர்கள்/3, 4 பிரதிவாதிகள்

**.. எதிர் ..**

எ.பால சுப்பிரமணியம்

...எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு இறுதியாக 25.09.2023ம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன் இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.T.இளங்கோவன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.ஆர்.பி.கனகராஜு அவர்கள் ஆஜராகியும், இதுநாள் வரை இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**( * suo moto rectified the clerical mistake)**

<u>உத்தரவு</u>

கடந்த 12.06.2015ம் தேதியில் மனுதாரர்களுக்கு எதிராக பிறப்பித்த ஒருதலைப்பட்ச தீர்ப்பாணையை ரத்து செய்ய வேண்டி உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 9 விதி 13 மற்றும் பிரிவு 151–ன்படி மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) <u>மனுதாரர்கள் தாக்கல் செய்த மனுவின் சுருக்கம் பின்வருமாறு</u>:–**

2.1.) தாவா சொத்தானது மனுதாரர்களின் தந்தை வழி தாயார் ஆன காளியம்மாள் என்பவருக்கு சுயார்ஜித வகையில் பாத்தியப்பட்ட சொத்து என்றும், மேற்படி தாவா சொத்தினை சுவாதீன அனுபவம் செய்து வந்த மனுதாரரின் பாட்டியானவர் மனுதாரரின் தாயார் மற்றும் 1ம் பிரதிவாதி மசிரியம்மள் மற்றும் பழனிச்சாமி ஆகியோர்களை வாரிசுதாரர்களாக விட்டுவிட்டு கடந்த 35 ஆண்டுகளுக்கு மேலாக காலமாகிவிட்டதாகவும், பின்னிட்டு அவரின் வாரிசுகள் தாவா சொத்தினை மேற்படியார்கள் மூவரும் கூட்டாக சுவாதீன அனுபவம் செய்து வந்ததாகவும், மேற்படி காளியம்மாளுக்கு பாத்தியப்பட்ட சொத்தினை அவரின் வாரிசுகள் மூவரும் கூட்டாக சுவாதீன அனுபவம் செய்து வந்த நிலையில் அவரின் ஓர் வாரிசான பழனிச்சாமி என்பவர் பொதுவில் உள்ள சொத்தினை 1/3 பாகத்தினை 3ம் நபர்களுக்கு எத்தனைய பாகமும் பிரித்துக்கொள்ளாமல் செக்குபந்திகள் காணாமல் பொதுவில் விற்பனை செய்துள்ளதாகவும், பொதுவில் உள்ள இதர

சொத்தினை மனுதாரர்கள் அனைவரும் சேர்ந்து கூட்டாக சுவாதீன அனுபவம் செய்து வந்ததாக கூறப்பட்டுள்ளது.

2.2.) பின்னிட்டு 1ம் பிரதிவாதிக்கு உடல் நிலை சரியில்லாமல் போனதாகவும், அவரின் மருத்துவ செலவிற்காக பணம் தேவை ஏற்படவே 1ம் பிரதிவாதி மனுதாரரின் தாயாரை நேரில் அனுகி பண உதவி செய்யும் படி கேட்ட போது வாதி பெயரிடப்படாத நிதி நிறுவனம் நடத்தி வந்த விவரம் தெரியப்படுத்திய போது வாதி தான் கடன் கொடுக்க வேண்டும் எனில் அசையா சொத்தை பொறுத்து ஆவணம் எழுதி பதிவு செய்து கொடுக்க வேண்டும் என்றும் கடன் தொகையினை செலுத்தி பின்பு மேற்படி ஆவணத்தினை ரத்து செய்து கொடுத்துவிடுவதாக கூறிதன் பேரில் மேற்படி தேதியில் 09.02.2007ம் தேதியில் பாகம் பிரிபடாத சொத்தினை வாதிக்கு மேற்படி கடன் தொகைக்கு ஆதரவாக கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டதாகவும், மேற்படி கிரைய ஒப்பந்தம் ஆனது 1ம் பிரதிவாதியின் மருத்துவ செலவிற்கு பெற்ற கடனுக்கு ஆதரவாக மட்டுமே பெறப்பட்டதாக கூறப்பட்டுள்ளது.

2.3.) மேற்படி கிரையம் ஒப்பந்த ஆவணத்தினை சாதகமாக வாதி எடுத்துக்கொண்டு ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கோரி தாவா தாக்கல் செய்வதற்காக வழக்கறிஞர் அறிவிப்பினை அனுப்பியதாகவும், வாதியின் அழைப்பாணையினை பெற்ற 1ம் பிரதிவாதி தான் மேற்படி வாதி தாக்கல் செய்துள்ள தாவாவினை மேற்கொண்டு தான் பார்த்துக்கொள்வதாகவும், தாவாவினை பற்றி எத்தகைய

நடவடிக்கையும் தங்களை மேற்கொள்ள வேண்டாம் என தெரிவித்ததாகவும், மேலும் தாவாவின் நடவடிக்கைகளை தானே பார்த்துக்கொள்வதாகவும், தங்களை நீதிமன்ற நடவடிக்கைகளில் எக்காலத்திலும் ஈடு பட வேண்டாம் என உறுதியாக கூறிவிட்டதாகவும், மனுதாரர்களும் 1ம் பிரதிவாதி தாவா சொத்தின் ஓர் உரிமையாளர் என்றும், தாவா சொத்தில் எத்தகைய வில்லங்கமும் ஏற்படுத்த மாட்டார் என்ற எண்ணத்தில் இருந்துவிட்டதாகவும், 1ம் பிரதிவாதி கூறிய வார்த்தையின் பேரில் தாவாவில் மனுதாரர்கள் பங்கேற்கவில்லை என்று கூறப்பட்டுள்ளது.

2.4.) பின்னிட்டு தாவாவில் கடந்த 12.06.2015ம் தேதியில் தாவாவில் மனுதாரர்களை பொறுத்த வரையில் ஒருதலைப்பட்ச தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்ட விவரமும், அதன் அடிப்படையில் நிறைவேற்று மனு எண்.18/2017–னை தாக்கல் செய்துள்ள விவரம், மேற்படி நிறைவேற்று மனுவின் அழைப்பாணை கிடைத்த பின்னிட்டு தான் தெரிய வந்ததாகவும், இதற்கிடையில் 1ம் பிரதிவாதி இறந்துவிட்டதாகவும், அவரின் வாரிசுகளும் நீதிமன்ற நடவடிக்கைகளில் எத்தகைய தலையீடும் செய்ய வேண்டாம் என்றும், தாங்கள் பார்த்துக்கொள்வதாக கூறியதாகவும், அசல் வழக்கில் மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞரை நியமிக்காத காரணத்தினாலும், எதிர்வழக்குரை மற்றும் எதிருரை தாக்கல் செய்யாததால் ஒருதலைப்பட்ச தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுவிட்டதாகவும், இது வேண்டுமென்றே

நிகழ்ந்த நிகழ்வு அல்ல என்றும், 1ம் பிரதிவாதியின் வற்புறுத்தலின் பேரில் மட்டுமே மனுதாரர்கள் நீதிமன்றத்தில் ஆஜராகாமல் போனதே தவிர வேண்டுமென்றே ஏற்படவில்லை என்றும், தற்போது 1ம் பிரதிவாதி மனுதாரர்களுக்கு கிடைக்க வேண்டிய பலன்களை பெற்றுக்கொள்ளுமாறு கூறிவிட்டதினால் இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளதாகவும், ஒருதலைப்பட்ச தீர்ப்பாணையினை ரத்து செய்யாவிடில் மனுதாரர்களுக்கு தாவா சொத்தில் கிடைக்க வேண்டிய பாகம் கிடைக்காமல் போக வாய்ப்பு உள்ளதாகவும், 12.06.2015 தேதியில் பிறப்பித்த ஒருதலைப்பட்ச தீர்ப்பாணையை ரத்து செய்ய வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) <u>எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்:-</u>

எதிர்மனுதாரர் அனைத்து சங்கதிகளை மறுத்ததுடன், மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளை மனுதாரர்களே நிரூபிக்க வேண்டும் என்றும், அசல் வழக்கு தீர்ப்பாணை மனுதாரர்கள் கூறுவது போல் ஒருதலைப்பட்ச தீர்ப்பல்ல என்றும் மேற்படி வழக்கு 12.06.2015ம் தேதி இரு தரப்பு வாதங்களின் அடிப்படையில் வழங்கப்பட்ட எதிர்க்கப்பட்ட தீர்ப்பு என்றும், இதன் பேரில் மனுதாரர்களுக்கு ஆட்சேபனை இருப்பின் மனுதாரர்கள் மேல்முறையீட்டு நீதிமன்றத்தை தான் அனுகவேண்டும் என்றும், இதே நீதிமன்றத்தில் இந்த மனு தாக்கல் செய்ய இயலாது என்றும், மனு தாக்கல் செய்வதற்கு ஏற்பட்ட

காலதாமதத்திற்கு மனுதாரர்கள் கூறப்பட்ட காரணங்கள் பொய்யானவை மற்றும் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றும், மனுவினை செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்று வேண்டப்பட்டுள்ளது.

4) இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டுள்ளது. இருதரப்பிலும் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் எதுவும் முன்னிலைபடுத்தவில்லை. வழக்கு கோப்புகளை கவனமாக பரிசீலனை செய்து கருத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

**5) இம்மனு அனுமதிக்கப்பட வேண்டுமா இல்லையா? என்பதே தீர்மாணிக்கப்பட வேண்டிய விஷியமாகும்:-**

5.1.) இம்மனுவின் தரப்பினர்களை மனுதாரர்களை 3, 4 பிரதிவாதிகள் என்றும், எதிர்மனுதாரரை வாதி என்றும் குறித்து உரைக்கப்பட்டுள்ளது. இந்த அசல் வழக்கானது பிரதிவாதிகளுக்கு எதிராக ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கோரி வாதியால் தொடரப்பட்டுள்ளது.

5.2.) மனு மற்றும் எதிருரையை கவனமாக பரிசீலினை செய்து கருத்தில் எடுத்துக்கொண்டுள்ள சூழ்நிலையில் கட்டளை 9 விதி 13-ன் வகைமுறையை இவ்விடத்தில் குறித்து உரைக்கவேண்டியது அவசியமாக உள்ளது.

Order 9 Rule 13 CPC The aforesaid provisions read as under:-

"Setting aside decree ex-parte against defendant:

In any case in which a decree is passed ex-parte against a defendant, he may apply to the Court by which the decree was passed for an order to set it aside; and if he satisfies the Court that the summons was not duly served, or that he was prevented by any sufficient cause from appearing when the suit was called on for hearing, the Court

shall make an order setting aside the decree as against him upon such terms as to costs, payment into Court or otherwise as it thinks fit, and shall appoint a day for proceeding with the suit;

Provided further that no Court shall set aside a decree passed ex-parte merely on the ground that there has been an irregularity in the service of summons, if it is satisfied that the defendant had notice of the date of hearing and had sufficient time to appear and answer the plaintiff's claim."

5.3.) மேற்கண்ட சட்டவகைமுறையை கவனமாக பரிசீலிக்கையில் நீதிமன்றத்தில் பிரதிவாதிகள் தோன்றாமல் இருந்ததற்கு போதுமான காரணத்தை நீதிமன்றம் திருப்தியுரும் வகையில் எடுத்து கூறினால் மனுவினை செலவு தொகையுடன் அனுமதித்து அசல் வழக்கின் கோரிக்கைக்கு பதிலளிக்க பிரதிவாதிகளுக்கு வாய்ப்பு வழங்கலாம் என்பதை இந்நீதிமன்றம் கருத்தில் எடுத்துக்கொண்டுள்ளது. மேலும், உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 96 வது பின்னவருமாறு அமைந்துள்ளது.

<u>Section 96: Appeal from Original Decrees;</u>

"(1) Save where otherwise expressly provided in the body of this Code or by any other law for the time being in force, an appeal shall lie from every decree passed by any Court exercising original jurisdiction to the Court authorized to hear appeals from the decisions of such Court.

(2) <u>An appeal may lie from an original decree passed ex parte.</u>

(3) No appeal shall lie from a decree passed by the Court with the consent of parties.

(4) No appeal shall lie, except on a question of law, from a decree in any suit of the nature cognizable by Courts of Small Causes, when the amount or value of the subject-

matter of the original suit does not exceed ten thousand rupees."

5.4) மேற்கண்ட பிரிவு 96-ஐ கவனமாக பரிசீலிக்கையில் 96 உட்பிரிவு 2-ன்படி அசல் ஒருதலைப்பட்ச தீர்ப்பாணைக்கு எதிராக மேல்முறையீடு உரிமை கொடுக்கப்பட்டிருப்பதை அறியமுடிகிறது. அதேசமயம் கட்டளை 9 விதி 13-ன்படியும் ஒருதலைப்பட்ச தீர்ப்பாணைக்கு எதிராக நீதிமன்றத்தில் தோன்றாமைக்கான நல்ல காரணத்தை குறிப்பிட்டு மனு தாக்கல் செய்வாராயின் அந்த பிரதிவாதிக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவினை நீக்கரவு செய்யவும், இந்நீதிமன்றத்திற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது.

5.5.) மேற்கண்டவாறு ஒருதலைப்பட்ச தீர்ப்பாணைக்கு எதிராக 1. மேல்முறையீடும் 2.கட்டளை 9 விதி13-ன்படியும் ஒரே நேரத்தில் பயன்படுத்தவும் பிரதிவாதிகளுக்கு வழிவகை உள்ளது. பிரதிவாதியும் நீதிமன்றத்தில் தோன்றாததற்கு கூறப்பட்டுள்ள காரணமானது நிறைவேற்று மனு எண்.18/2017-னை தாக்கல் செய்த பிறகு அந்த மனுவின் அறிவிப்பு கிடைத்த பிறகு தான் பிரதிவாதிகளுக்கு ஒருதலைப்பட்ச தீர்ப்பாணை குறித்து தெரியவந்ததாகவும், 1ம் பிரதிவாதி இறந்துவிட்டதாகவும், அவரது வாரிசுகள் நீதிமன்ற நடவடிக்கைகளில் இந்த பிரதிவாதிகளை தலையீடு செய்ய வேண்டாம் என்று கூறிவிட்டதாகவும், அதனால் அவர்களின் வார்த்தைகளின் பேரில் கொண்ட நம்பிக்கையினால் இந்த பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்றும், 1ம் பிரதிவாதியின் வற்புறுத்தல் பேரில் தான் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை என்றும்,

அதனால் தான் ஒருதலைப்பட்ச உத்தரவினை நீக்கரவு செய்ய காலதாமதம் ஆகிவிட்டதாகவும் வாதம் முன்வைக்கப்பட்டுள்ளது. வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் முன்வைத்துள்ள வாதத்தில் இந்த அசல் வழக்கானது கடந்த 12.06.2015 ம் தேதி இரு தரப்பு வாதங்களை கேட்டு தகுதியின் அடிப்படையில் பிற பிரதிவாதிகளுக்கு எதிராக தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதால் இந்த பிரதிவாதிகள் ஒருதலைப்பட்ச தீர்ப்பாணைக்கு எதிராக மேல்முறையீடு தான் தாக்கல் செய்ய வேண்டும் என்றும் வாதம் முன்வைக்கப்பட்டுள்ளது.

5.6.) இரு தரப்பு வாதங்களை கருத்தில் கொண்டு பரிசீலிக்கையில் கட்டளை 9 விதி 13-ன்படி மற்றும் பிரிவு 96-ன்படியும் இந்த பிரதிவாதிகளுக்கு இம்மனுவினை தாக்கல் செய்ய உரிமை உள்ளதை அறியமுடிகிறது. பிரதிவாதிகள் தரப்பில் பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ள காரணங்கள் திருப்தி அளிப்பதாக உள்ளது. மேற்கண்ட சூழ்நிலையில் பிரதிவாதிகளுக்கு ஒரு வாய்ப்பு வழங்கி இம்மனுவினை செலவு தொகையுடன் அனுமதிக்க உகந்தது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக,** வாதிக்கு ரூ.5,000/-ஐ வரும் 30.10.2023 தேதிக்குள் செலுத்த வேண்டும் என்றும், தவறும்பட்சம் மனு தள்ளுபடி செய்யப்படும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் மனுவினை அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவு தொகை செலுத்த **அழைக்க 30.10.2023**

இந்த உத்தரவானது என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால்

நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிறகு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் 07.10.2023 அன்று அவையறிய பகரப்பட்டது.

**ஒம்./—எஸ்.வடிவேல்,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**அவிநாசி.**

**பிற்சேர்க்கை :—** இல்லை

**ஒம்./—எஸ்.வடிவேல்,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**அவிநாசி.**

S VADIVEL
Digitally signed by S VADIVEL
Date: 2023.11.16 18:05:55 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**அவிநாசி.**

இ.ம.எண்.308/2023
இன்
அ.வ.எண்.315/2007
சீரான/வரைவு உத்தரவு
நாள்.07.10.2023
மா.உ.நீ., அவிநாசி